
# தூதன்

தூதன்-28 ஏப்ரல் 2019 தூது-4

அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத்தொடங்கினான். மாற்கு 10:47




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 10 |
| உதவி ஆயரம்மா மடல் | 12 |
| செயலர் மடல் | 14 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| உயிர்ப்புப்பண்டிகை | 18 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| முத்திரை மோதிரம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்துகொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| VBS Report 2019 | 30 |
| ஆராதனை பாடல்கள் | 31 |
| Children’s Corner | 32 |
| Birthday Celebrants | 35 |
| Wedding Anniversary | 38 |
| A day in the Holy Temple - Part 4 | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com,  E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான அன்பு திருச்சபையின் மக்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இணையற்ற திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்.

துவக்ககாலத் திருச்சபையின் மக்கள் உயிர்த்தெழுந்த திருநாளின் வழிபாடுகளில் இயேசு உயிர்த்தெழுந்தார், ஆம் அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நன்றியுடன் நினைவுகூருவார்கள். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த அந்த நன்னாளிலும் இந்த "நினைவுகூருதல்" என்ற வார்த்தை தூதர்களினால் அறிவிக்கப்பட்டதை நற்செய்தி நூல்களில் நாம் காண்கின்றோம்.

"உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள்" லூக்கா 24:7

"Remember how he told you" Luke 24:7

1. இயேசுகிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூருங்கள் (Remember the Suffering of Jesus):- இயேசுகிறிஸ்துவின் பிறப்பின்பொழுதே அவர் பாடுகளை அனுபவித்து அதன் வழியாய் மனுக்குலத்திற்கு மீட்பினை வழங்கப்போகிறார் என்பதன் அடையாளமாக "வெள்ளைப்போளம்" காணிக்கையாக ஞானிகளால் படைக்கப்பட்டது.

ஏசாயா தீர்க்கரும் மேசியாவாக வந்த இயேசுவைப் பாடுபடும் தாசனாக 53-ம் அதிகாரத்தில் சித்தரித்திருப்பதைக் காணலாம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியப்பாதையின் நிறைவுகாலங்களில் தம்முடைய மரணத்தை மூன்றுமுறை முன்னறிவித்திருப்பதை மாற்கு 8:31, 9:31, 10:33 பகுதிகளில் நாம் காணலாம். இயேசுவின் உயிர்த்தெழுதலை மகிழ்ச்சியுடன் நினைவுகூறும் வேளைகளிலெல்லாம், அவரது பாடுகளையும் நினைவுகூற அழைக்கப்படுகிறோம். பாடுகளை ஏற்றுக்கொண்டதால் உயிர்த்தெழுதல் அர்த்தம் நிறைந்ததாய் அமைந்துள்ளது. ஆகவே இயேசுவின் பாடுகளை நினைவுகூருவோம்.

2. இயேசுவின் மரணத்தை நினைவுகூருவோம் (Remember the death of Jesus) :- இயேசுவின் மரணத்தைக் குறித்து முதல் நூற்றாண்டிலேயே பல்வேறு விதமான குழப்பமான, தவறான செய்திகள் திரித்துக் கூறப்பட்டதை திருச்சபை வரலாற்றின் வழியாய் நாம் அறிந்துகொள்ளலாம். ஆனால் அப்போஸ்தலனாகிய பேதுரு தன் முதல் அருளுரையில் ஆணித்தரமாக கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்து பேசுகிறார்.

“அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்” அப்போ. 2:23.

ஆகவே கிறிஸ்துவின் மரணம் மாயையான ஒரு தோற்றம் அல்ல. அவர் மெய்யாகவே பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை நமக்காக, நம் பாவங்களுக்காக, நாம் மீட்பைப் பெறவேண்டும் என்பதற்காக ஏற்றுக்கொண்டார். பாவம் அறியாத இயேசு பாவமாக்கப்பட்டார். ஏதிராளியாகிய சாத்தானை தமது சிலுவை மரணத்தின் வழியாக வெற்றிகொண்டார். எனவே இயேசுகிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருவோம்.

3.இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவுகூருவோம் (Remember the Resurrection of Jesus):- கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை சாராம்சத்தை பவுலடிகளார் 1 தீமோ. 3:16-ல், இப்படி நமக்குக் கற்றுத் தருகிறார்.

தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்.

1 கொரிந்தியர் 15:20 கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

1 கொரிந்தியர் 15:3-4 கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார், இதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம் என்று முழங்கின பேதுருவைப்போல் இந்த உயிர்த்தெழுந்த திருநாளில் நாமும் உரத்த குரலில் கூருவோம்.

இயேசு உயிர்த்தெழுந்தார்
ஆம் அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்

திருச்சபையார் யாவருக்கும் எமது மகிழ்வான உயிர்த்தெழுந்த திருநாள் நல்வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஏப்ரல் 2019

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05-04-2019 | சிலுவை சீடத்துவின் புதிய வழிகாட்டுதல் | ஆதியா. 26:12-33 | 2கொரிந். 11:21-31 | மாற்கு 10:35-45 | 92 |
| 12-04-2019 | குருத்தோலை வெள்ளி | சகரியா 9:1-12 | 1 தீமோத். 4:6-16 | லூக்கா 19:29-40 | 118:19-29 |
| 18-04-2019 | பெரிய வியாழன் | யாத்தி. 12:1-11 | 1கொரிந். 11:23-34 | மாற்கு 10:17-26 | 116:1-9 |
| 19-04-2019 | புனித வெள்ளி | ஏசாயா 53:1-8 | | | |
| 21-04-2019 | உயிர்த்தெழுந்த திருநாள் | யோபு 19:23-29 | 1கொரிந். 15:20-28 | மாற்கு 16:1-11 | 16 |
| 26-04-2019 | உயிர்த்த ஆண்டவர் அருளும் அதிகாரம் | ஆதியா. 28:10-22 | அப்போ. 20:7-12 | யோவான் 20:1-18 | 29 |

# ஆயரம்மா மடல்


ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதங்கள் எல்லாம் நம்மைக் கண்மணிபோல காத்துவந்த நம் தேவாதிதேவனுக்கு துதியையும், கனத்தையும் செலுத்துகிறேன். இனிவரும் காலங்களிலும், கர்த்தருடைய கிருபையும், சமாதானமும் தொடர்ந்து நம்மை வழிநடத்த ஆண்டவரை வேண்டிக்கொள்ளுவோம்.

இந்த மாதம் ஒரு புதிய முயற்சியாக வசனங்களைப் படத்தில் பார்த்து கண்டுபிடிப்போம். Technology-ஐ அதிகமாகப் பயன்படுத்துகிற நாம் இதைக் கண்டிப்பாக யோசித்து செய்ய நமக்கு கடவுள் அருள் புரியட்டும். இந்த படங்களின் விடைகளை 15-ம் பக்கத்தில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.


கிறிஸ்துவின் பணியில்
உங்கள் ஆயரம்மா
திருமதி.மேரி உமா விக்டர்.

1 

2 


3 

4 

5 

6 

7 

8 

9 

10 

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

### தீர்ப்பை மாற்றிய உயிர்த்தெழுதல்

உயிர்த்தெழுந்த இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசுகிறிஸ்துவை மரணத்திற்குப் பாத்திரன் (மாற்கு 14:64) என்று பிரதான ஆசாரியர் தீர்ப்பு செய்தனர். ஆனால் அவர் தேவகுமாரனாய் இருந்தபடியினால் அந்த தீர்ப்பை "உயிர்த்தெழுதல்" என்று மாற்றி எழுதின பிதாவின் வல்லமை, ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாட ஆயத்தப்படுகின்ற நமக்கும், நம் வாழ்வில் எழுதப்பட்டிருக்கும் நமக்கு விரோதமான தீர்ப்பை மாற்றி எழுத வல்லவராய் இருக்கிறார். ஆகவே நாம் அவருடைய பிள்ளைகள் என்கிற உணர்வோடு பண்டிகையைக் கொண்டாடுவோம். உயிர்த்தெழுதலின் ஜெயத்தைப் பெறுவோம்.

**1. நிர்ப்பந்தமானவனை நீதிமானாக்கிய உயிர்த்தெழுதல்:**

நிர்ப்பந்தமான மனுஷன் (ரோமர் 7:24) பாவத்தினால் சிறையாக்கப் பட்டிருக்கிறான். இவர்களை சத்துருவாகிய பிசாசு மரணத்திற்கு நியமித்து தீர்ப்பு செய்திருந்தான் (ரோமர் 6:23). ஆனால் தேவதயவும், மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது (தீத்து 3:4), தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்யும் கிருபாதார பலியாக்கி (1 யோவான் 2:2) உயிரொடெழுப்பினதின் மூலம் நாமும் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்.

நீதிமான் என்று தேவன் உயிர்த்தெழுதலின் மூலம் தீர்ப்பு செய்ததினால் சிறையிலிருந்து விடுதலையாகிறான். அதைப்போல நம் வாழ்விலும் சத்துருவின் கோட்டைகள், அரண்களிலிருந்து உயிர்த்தெழுதலினால் உண்டான தேவநீதி உடைக்கிறது. நம்மை விடுதலையாக்குகிறது. அதை இந்த ஈஸ்டர் பண்டிகை கொண்டாடுகிற நமக்குச் சொந்தமாக்குகிறார்.

மேலும் நீதிமான் என்று தீர்ப்பு செய்வதின்மூலம் (ரோமர் 4:25) நீதிமானுக்குரிய எல்லா ஆசீர்வாதங்களும் நம்மை வந்து சேருகிறது. (நீதி. 10) நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும், நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதம் தங்கும். நீதிமான்கள் கர்த்தருடைய ராஜ்யத்தில் சூரியனைப்போல பிரகாசிப்பார்கள் என்ற ஆசீர்வாத நிலையைப் பெறுவோம்.

இந்த உலகம் உங்களை எப்படி தீர்ப்பு செய்திருக்கின்றது. மனிதர்கள் உங்களை எப்படி தீர்ப்பு செய்கின்றார்கள். உயிர்த்தெழுந்த வல்லமை இன்று, இப்போதே எந்த தீர்ப்பையும் மாற்றி எழுதும்.

### 2. பொல்லாங்கனை பொறுப்புள்ளவனாக்கின உயிர்த்தெழுதல்:

பரிசுத்தவான்களின் சபை பொல்லாங்கான யோசனைகளை செய்கிறவனாகிய பவுலைப் பார்த்ததாக அனனியா தீர்க்கதரிசி ஆண்டவரிடம் சொல்கின்றான். சபையும் பவுலை பொல்லாங்கன் என்று தீர்ப்பு செய்தது. பரிசுத்தவான்கள் அவனைப் பொல்லாங்கன் என்றே தீர்ப்பு செய்தனர்.

சபைகள், ஊழியக்காரர்கள், தீர்க்கதரிசிகள் உங்களை எப்படி தீர்க்கிறார்கள். உங்களுக்கு முன்னோரின் சாபம் இருக்கிறது என்கிறார்களோ? பில்லி சூனியம் என்று தீர்க்கிறார்களோ? செய்வினை என்று கூறி தீர்க்கிறார்களோ?

இன்று உங்கள் வாழ்வில் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து இந்த தீர்ப்பை மாற்றி எழுதுகிறார். பொல்லாங்கன் என்னும் பவுலை (அப்.9:15) சுவிசேஷத்தைச் சுமந்து செல்லும் பொறுப்புள்ள பாத்திரமாக்கினார். அதுபோல நம்மையும் சிலுவையைச் சுமக்கும் பாத்திரமாக உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை மாற்றும்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Millar Singh T. | 2829 | Dubai |
| 2 | Mr. Sharvin John | 2830 | Dubai |
| 3 | Mr. Vivin Augustin S.R | 2831 | Dubai |
| 4 | Mr. John Lawrence | 2832 | Dubai |
| 5 | Mr. J. Jokim Samuel Jebson | 2833 | Dubai |
| 6 | Mr. T. Iwin | 2834 | Dubai |
| 7 | Mr. S.Sundar Singh | 2835 | Dubai |
| 8 | Miss Andrina Andrus Jayapandian | 2836 | Dubai |
| 9 | Mr. Anton Nelson Andrus | 2837 | Dubai |
| 10 | Mr. L. Robin | 2838 | Fujairah |

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

டோரா ஒரு அழகிய குட்டிப்பெண். 3-ம்வகுப்பு படித்து வந்தாள். அவளுக்கு வேதத்தைப் போதிக்கும் அன்பான பெற்றோர் இருந்தனர். அவளுடைய தாத்தா, பாட்டியும் அவர்களோடே இருந்தனர். அவர்களும் தேவனுக்குப் பயந்தவர்கள். பேத்திக்கு சிறுகதைகள் மூலமும், நடந்த சம்பவங்கள் மூலமும் கிறிஸ்துவின் அன்பை எடுத்துச் சொல்வதில் வல்லவர்கள். டோராவுக்கும் தாத்தா, பாட்டி என்றால் கொள்ளை பிரியம்.

அன்று வெள்ளிக்கிழமை. டோராவுக்கு விடுமுறை நாள். அன்று Good Friday என்பதால் மும்மணி நேர ஆராதனை. ஆராதனையை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்ததும் பாட்டியிடம், "இன்று ஏன் மூன்று மணி நேர ஆராதனை? எப்போதும் இரண்டு மணி நேரத்திலேயே முடிந்துவிடுமே!" என கேட்டாள். பாட்டிக்கு மிகுந்த சந்தோஷம். ஏனென்றால் பேத்திக்கு இன்று Good Fridayயின் மேன்மையையும், உயிர்த்தெழுந்த ஆண்டவரைப் பற்றிய நற்செய்தியையும் கூறிவிடலாம் அல்லவா!

டோராவிடம் பாட்டி, "நான் எப்போதும் வெள்ளிக்கிழமைகளில் சிறுகதை சொல்லுவேன் அல்லவா! இன்று நான் உனக்கு ஒரு நடந்த சம்பவத்தைக் கூறுகிறேன். நீ கேட்ட கேள்விக்குப் பதிலும், அந்த சம்பவத்தைச் சொல்லும்போது விளங்கும்" என்றார்கள். டோரா அகன்ற கண்களோடு பாட்டியைக் கவனிக்கலானாள்.

பாட்டியும் கதை சொல்லத் துவங்கினார்கள். "ஒரு அழகிய இளம் தம்பதி. அவர்களுக்கு தேவன் ஒரு எழில்மிகு ஆண்குழந்தையைக் கொடுத்தார். அந்த குழந்தைக்கு நான்கு வயதானது. அவன் அழகாக வளர்ந்தான். நன்றாக பேசினான். இப்படி மகிழ்ச்சியாய் வாழ்ந்து கொண்டிருந்த அந்த குடும்பத்தில், திடீரென அந்த சிறுவனுக்கு டிப்தீரியா நோய் வந்தது. டிப்தீரியா என்பது தொண்டையைப் பாதித்து மரணத்தை விளைவிக்கக்கூடிய கொடிய தொற்றுநோய்.

தாய் தன் மகனை முத்தமிடவே கூடாது என்ற கட்டாய கட்டளை. டிப்தீரியாவிற்குச் சிகிச்சை கண்டுபிடிக்கும் முன்பாக நடந்த சம்பவம் இது. தன் மகனை முத்தமிடக்கூடாது என்று தாய் தன்னை மிகவும் கட்டுப்படுத்தி பார்த்தாள். ஆனால் பிள்ளை வேதனையில் துடித்து மாள்வதைக் கண்ட தாயால் சகிக்க முடியவில்லை. தன் மகனைக் கையிலெடுத்து அணைத்து முத்தமிட்டாள். டிப்தீரியா வந்து மரித்துப்போனாள்" என முடித்தார்கள். டோராவின் கண்கள் கலங்கியிருந்தது.

பாட்டி தொடர்ந்தார்கள். "தாயின் அன்பைக் காட்டிலும் மேலான அன்பு கர்த்தருடைய அன்பு. நாம் பாவத்தில் மரிப்பதை அவரால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. நாம் அவரோடு உறவு கொள்ளும்படியாக தன் மகனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியதே அவர் நமக்குக் கொடுத்த அன்பின் முத்தம். இயேசுகிறிஸ்து நம் பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அவர்மேல் நம்பிக்கை வைப்போமானால் நிச்சயம் மோட்சம் செல்லுவோம். இயேசுகிறிஸ்து சிலுவையில் நம் பாவங்களினிமித்தம் அவர் சகித்த பாடுகளையும், அந்த சிலுவையில் அவர் பேசின வார்த்தைகளைத்தான் இந்த Good Friday-ல் தியானித்தோம். அவர் நமக்காக மூன்று மணிநேரம் சிலுவையில் தொங்கினார் என்பதால், இந்த ஆராதனை மும்மணி ஆராதனை. மூன்றுநாள் கழித்து அவர் மீண்டும் உயிரோடு எழுந்ததையே ஈஸ்டர் எனக் கொண்டாடுகிறோம்" என்றார்கள். டோராவிற்கு எல்லாம் விளங்கியது. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற அன்பும் புரிந்துவிட்டது. அன்றிலிருந்து அவள் இன்னும் அதிகமாய் இயேசு கிறிஸ்துவை நேசித்தாள்.

வேதவாசிப்புப் பகுதி : யோவான் 19:16-30, 20:19,20
மனப்பாட வசனம் : ரோமர் 5:7,8

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி்.பர் ஆல்வின்,
உதவி ஆயரம்மா.

# உதவி போதகர் மடல்

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் தூய பெயரில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளின் சிந்தனையுடன் மார்ச் மாதத்தினை நிறைவு செய்ய கர்த்தர் கிருபை புரிந்தார். கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். ஏப்ரல் மாதமாகிய புதிய மாதத்தில் கர்த்தர் நமக்கு அருளியிருக்கின்ற ஆசீர்வாதங்களுக்காகவும், குருத்தோலை தின, சிலுவை தியான மற்றும் உயிர்த்தெழுதல் நாள் சிறப்பு ஆராதனைகளுக்காகவும் கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம். கர்த்தரின் வசனம் உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

திருமறைப்பாடம் : மத்தேயு 28:1-10 தியான வசனம் : மத்தேயு 28:6

"அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார், கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" "He is not here; he has risen, just as he said. Come and see the place where he lay."

இயேசுவின் மரணம் அவரது சீடர்களின் வாழ்வில் பெரும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும், நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியது. லூக்கா 24:21-ல், அவரே இஸ்ரவேலை மீட்டி இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். ஆனால் அவரைக் கொன்றுவிட்டார்கள் என ஏங்கும் சீடரின் உணர்வுகளைக் காணலாம். இந்த நிலையில் இயேசு உயிர்த்தெழுந்தார் என்கின்ற செய்தியையும், உயிர்த்தெழுந்த இயேசுவைச் சந்தித்த நிகழ்வுகளும், அவரை நம்பின மக்கள் அனைவரின் உள்ளத்திலும் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. எந்நிலைகளில் இயேசுவின் உயிர்த்தெழுதல் மானிடர்க்கு மகிழ்வைத் தந்தது என்பதைத் தியானிப்போம்.

1. இயேசுவின் உயிர்த்தெழுதல் தீமைமீது வெற்றி பெறுதலின் மகிழ்ச்சி (மத். 28:1,2): "மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்."

நீதிபரர் எனப் பிலாத்து இயேசுவைக் கண்டபோதும், தன் அரியணைக்காய், இயேசுவுக்கு மரணத்தீர்ப்பளித்த தீமை. பரபாசை எங்களுக்கு விடுவியும். நசரேயனாகிய இயேசுவைச் சிலுவையில் அறையும் என்று சிலுவை மரணத்தை இயேசுவுக்கு நேராய் துரிதப்படுத்திய யூதசமய மக்களின் தீமை. பரிசேய, சதுசேயரின் சமய வெறி, அதிகார வெறி தழுவிய தீமை. இவை எல்லாவற்றிற்கும் முடிவு தரும் வகையில் இயேசு தீமை மீது வெற்றி கண்டார்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் தரும் வாழ்வு இன்றும் இத்தகைய தீமைகளை அகற்றும் நிறைவாழ்வாகும். நாம் கிறிஸ்துவுடன் உயிர்பெற்று எழுந்ததினால், இப்பொழுது கோபம், மூர்க்கம், பொறாமை, வீண் வார்த்தைகள் ஆகிய தீமைகளை அகற்றிவிடுங்கள் என்கிறார் தூய பவுல். (கொலோசெயர் 3:8). தீமையை ஜெயித்த இயேசுவைப் பின்தொடர்ந்து, தீமையை வெறுத்து, நன்மைக்குச் சான்று பகர்வோம்.

2. இயேசுவின் உயிர்த்தெழுதல் மரணத்தின் மீது வெற்றி பெறுதலின் மகிழ்ச்சி (மத்தேயு 28:6): "அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார், கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்". கிறிஸ்து மரணத்திலிருந்து எழுப்பப்படாமலிருந்தால் அது ஒருபோதும் தோற்கடிக்கப்படாத நமது பகைவனாகவே இருந்திருக்கும். ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்வில் மரியாள் வெறுமையான கல்லறையைக் கண்டும், உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதன்முதலில் தரிசித்தும், கிறிஸ்துவை "போதகரே" என ரபூனி என்ற வார்த்தை மூலம் முழக்கமிட்டும் மரணத்தை வென்ற வாழ்வு தரும் கிறிஸ்துவை அடையாளம் கண்டுகொண்டாள். தூய பவுல் 1 கொரிந்தியர் 15:22-ல் "கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்பதின் மூலம் உயிர்த்த கிறிஸ்துவில், நமக்கும் மரணத்தினின்று உயிர்பெறுதல் உண்டு என்ற வாக்குறுதியில், மகிழ்ச்சியில் உறுதியாயிருப்போம்.

3. இயேசுவின் உயிர்த்தெழுதல் நற்செய்தி அறிவித்தலின் மகிழ்ச்சி (மத்தேயு 28:7): "இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்". இயேசுவின் உயிர்த்தெழுதல் நற்செய்தியினைப் பகரும் வாழ்வு நிலைக்கு நம்மை அழைக்கின்ற ஒன்றாகிறது. பவுலடியாரும் இதனைக்குறித்து 1 கொரிந்தியர் 15:14-ல், "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா" என்கிறார்.

நம் அன்றாட வாழ்வு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் தாக்கத்தால் கனி கொடுப்பதாய் அமைந்திடல் வேண்டும். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தீமையின் மீதும், மரணத்தின் மீதும் வெற்றிகொண்ட வாழ்வை நமக்கு அறிமுகம் செய்கின்றது என்பதை உணர்ந்து, நற்செய்தி வாயிலாய் சான்று பகர்வோம்.

இராஸ் அல் கைமா திருச்சபை குடும்பங்களின் சார்பிலும், போதகர் குடும்பத்தின் சார்பிலும், உயிர்த்தெழுதல் தின வாழ்த்துக்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்<br>
Rev.M.Rajesh Kumar.<br>
உதவி போதகர்.

கர்த்தரின் பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. அனைவருக்கும் புதிய மாதத்தின் வாழ்த்துக்களும், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தின வாழ்த்துக்களும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

## திருமறையில் "புறா"

**"புறாக்களைப்போல கபடற்றவர்களாயிருங்கள்" மத்தேயு 10:16**

திருமறையில் அநேக பறவைகளைக்குறித்து சொல்லப்பட்டுள்ளது. ஒருசில பறவைகள் பல உண்மைகளை விளக்க எடுத்துக்காட்டாக குறிப்பிடப்பட்டுள்ளன. புறா என்கிற பறவையைக் குறித்து திருமறை வசனங்கள் சார்ந்து உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

புறா முக்கியமான சின்னங்களில் ஒன்றாக இருக்கிறது. ஐக்கிய நாடுகளின் சமாதானச் சின்னம் புறா ஆகும். சில முக்கிய நிகழ்ச்சியின் துவக்கத்தில் புறாக்கள் பறக்கவிடப்படுவது இன்றும் வழக்கமாக இருக்கிறது.

### புறாக்களின் பயன்பாடு:

மன்னர்கள் காலத்தில் கடிதப்போக்குவரத்து மற்றும் தூது ஓலை அனுப்புவதற்கு பயன்படுத்தப்பட்டது. இராணுவத் தலைவர்கள் தலைமையிடத்திற்குச் செய்தி அனுப்ப நன்கு பயிற்சி கொடுத்து பழக்குவிக்கப்பட்ட புறாவைப் பிடித்து சிறு தகர குப்பியினுள் செய்தியை வைத்து புறாவின் காலில் கட்டி பறக்கவிடுவார்கள். அது நேராக தலைமையிடத்திற்குச் சென்றுவிடும். அதனிடமிருந்து செய்தியை அறிந்துகொள்வார்கள்.

திருமறையிலும் நோவாவின் காலத்தில் நாற்பது நாள் இரவும் பகலும், மழை பெய்தபோது நோவாவும், தன் குடும்பமும், ஜீவசுவாசமுள்ள மாம்ச ஜந்துக்களும் பேழையினுள் காப்பாற்றப்பட்டன. பூமியில் தண்ணீர் வற்றிப்போனதா என்ற செய்தியை அறிய புறாவை விட்டபோது முதலில் அது திரும்ப பேழைக்குள் வந்தது. இரண்டாவது முறை புறா தன் வாயில் ஒலிவமரத்தின் இலையை எடுத்து வந்து, தண்ணீர் வற்றிப்போனது என்ற செய்தியை அறிவித்தது (ஆதியாகமம் 8:8-11)

திருமறையில் புறா பலிசெலுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. ஆபிரகாம் புதிய நாட்டைச் சுதந்தரிக்கப்போகிறான் என்ற செய்தியைக் கேட்டபோது பலிக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டது புறா (ஆதி. 15:9) ஆகும்.

யோசேப்பும் மரியாளும் தேவனால் சொல்லப்பட்டபடியே புறாவை பலி செலுத்த இயேசுவை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள் (லூக்கா 2:22-24).

பாவ நிவாரண பலியாக கொடுக்கப்பட உகந்தது புறாவாகும் (லேவி. 12:6,7).

சுத்தமானதும் பலிக்கு உகந்ததுமான புறாவையே காணிக்கையாக, பலியாகப் படைத்தார்கள்.

**புறாக்களின் தன்மைகள் :**
புறா மிகவும் பயந்த சுபாவமுடையது. இஸ்ரவேல் ஜனங்கள் அசீரிய தேசத்திலிருந்து புறாக்களைப்போல பயந்து வருவார்கள் (ஓசியா 11:11). புறாக்களைப் போல இறைமக்களாகிய நமக்கு கர்த்தரிடம் பயம் வேண்டும். தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படுகிய பயம் (நீதி.8:13). ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான் (நீதி. 14:16).

புறாக்கள் ஒன்றோடொன்று சண்டை செய்யாது. தாவீதுக்கு விரோதமாக அப்சலோம் செயல்படுவதை அறிந்த தாவீது, ஆ எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால் பறந்துபோய் இளைப்பாறியிருப்பேன் (சங்கீதம் 55:6) என்கிறார்.

புறா கபடற்றது. ஆகவேதான் இயேசுகிறிஸ்து புறாக்களைப்போல் கபடற்றவர்களாயிருங்கள் (மத்தேயு 10:16) என்றார். கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார் (சங். 116:6).

இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது தேவஆவி புறாவைப்போல் இறங்கி வருகிறதைக் கண்டார் (மத்.3:16). புறா தூய ஆவியரின் அடையாளமாகச் சித்தரிக்கப்படுகிறது.

**முடிவுரை:**
திருமறையில் புறா முதன்மையான ஒன்றாகக் கருதப்பட்டதைக் காணலாம். குறிப்பாக பலியாக, செய்தி அறிவிக்க, கபடற்றதாக, தூய ஆவியின் அடையாளமாக விளங்கியது. இயேசுகிறிஸ்து பரிசுத்தமாய் வாழ்ந்து மனுக்குல மீட்புக்காக தம்மையே சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்தார். நாம் இந்த உலகில் வாழும்போது நமது வாழ்வின் வழியாக கிறிஸ்துவின் அன்பை உலகிற்கு அறிவித்து வாழ தூய ஆவியானவர் கிருபை செய்வாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி J.விஜிலா ராணி
உதவி போதகரம்மா.

நாம் தேவனோடு கொண்டுள்ள உறவையும், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தையும் கர்த்தருக்குள் சீர்தூக்கிப் பார்த்து, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி பெறுவதற்கு தேவன் நமக்குத் தந்த லெந்து காலத்துக்காகத் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

மார்ச் 6-ம் தேதியன்று, லெந்து நாட்களைத் துவங்கும்வண்ணமாக சாம்பல் புதன்கிழமை ஆராதனை சிறப்பாக நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினமாக மார்ச் 8-ம் தேதி ஆசரிக்கப்பட்டதை முன்னிட்டு அன்றைய தின வெள்ளிக்கிழமை ஆராதனை, பெண்கள் ஐக்கிய சங்கத்தினரால் சிறப்பாக நடத்தப்பட்டது. அன்று பெண்கள் சிறப்புப் பாடல்கள் பாடி ஆராதனையை சிறப்பித்தார்கள். அதைத் தொடர்ந்து மார்ச் 9-ம் தேதியன்று நமது துபாய் சபை மற்றும் நம் கிளைச்சபை பெண்கள் எல்லாருக்கும் ஒருங்கிணைந்த பெண்கள் ஒருநாள் ஒடுக்கக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வெள்ளி ஆராதனையிலும், சனிக்கிழமை ஒடுக்கக்கூட்டத்திலும், கோவையைச் சேர்ந்த திருமதி.சுஜானா அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். இச்சிறப்பு நிகழ்வுகளைச் சிறப்பாக ஒருங்கிணைத்த நமது பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி, நமது ஆயரம்மா திருமதி.மேரி உமா விக்டர் மற்றும் நமது பெண்கள் ஐக்கிய சங்க பொறுப்பாளர் திருமதி.புனிதாதாஸ் அவர்களுக்கும், இவர்களுக்கு உறுதுணையாக இருந்த அனைத்து பெண்கள் ஐக்கிய சங்கத்தினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்ச் மாதம் 15 வெள்ளியன்று நம் ஆலய ஆராதனையைத் தொடர்ந்து நமது விடுமுறை வேதாகம பள்ளி தொடக்கவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்வருட VBS-ல் Get connected என்ற தலைப்பில் 5நாள் பாடதிட்டத்தின் கீழ் ஏறக்குறைய 400 பிள்ளைகள் பங்குபெற்றார்கள். இந்தியாவிலிருந்து Scripture Union English wing-ஐச் சேர்ந்த Mr.Sam Jaisunder, Ms.Janet, Mr.Moses, Mr.Jaison இவர்களால் மார்ச் 15 முதல் 23 வரை சிறப்பாக நடைபெற்றது. இவ்வருட VBS-க்கு Inhouse Director ஆக இருந்து சிறப்பாக செயல்பட்ட Mrs. Latha Rajan மற்றும் இவர்களோடு இணைந்து உழைத்த ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மார்ச் 23-ம் தேதி VBS Final Day Programme சிறப்பாக நடைபெற்றது.

மார்ச் 22-ம் தேதி ஆலய ஆராதனையில் மத்திய கர்நாடகா diocese-ன் பேராயர் Rt.Rev. Dr.Prasannakumar மற்றும் அவர்களோடு 29 ஆயர்களும் ஆராதனையில் பங்குபெற்றார்கள். அவ்வாராதனையில் Rt.Rev. Dr.Prasannakumar அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். SU Director Mr.Sam Jaisunder அவர்கள் அவ்வாராதனையில் Get Connected என்ற VBS தலைப்புக்குத் தொடர்ச்சியாக, How to grow spiritually? என்று ஒரு சிறிய சிறப்புச் செய்தியை பிள்ளைகளையும், சபையாரையும் ஊக்குவிக்கும்வண்ணமாக கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்து VBS சிறப்புப் பாடல்களை பிள்ளைகள் பாடி ஆராதனையை சிறப்பித்தார்கள்.

இந்த மாதத்தின் அனைத்து நிகழ்வுகளுக்காகவும் ஜெபிக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

## 5-ம் பக்கத்திற்கான விடைகள்

1. கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்
2. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ, புதுபெலன் அடைந்து கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்.
3. நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாய் இருப்பாய்.
4. கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவான்
5. அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்.
6. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார், அவர் வாயினின்று அறிவும், புத்தியும் வரும்.
7. நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை.
8. இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.
9. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிற பிரயாசம் விருதா
10. பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்கு கிரீடம். பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதா.

# தெரிந்த சத்தியம்! தெரியாத உண்மை!!!

## மோசே

எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் அனைவரும் ராமசேசிலிருந்து சுக்கோத்திற்கு பயணமானார்கள். எகிப்தியர்கள் மரித்த தங்கள் தலைச்சன் பிள்ளைகளை அடக்கம் செய்ய மூன்று நாட்களாகியது. மூன்று நாட்களுக்குப்பிறகு அவர்களில் அநேகர் எழும்பி நாம் இஸ்ரவேலரைத் திரும்ப அழைத்துக்கொண்டு வருவோம் எனக் கூறினார்கள். தாங்கள் இஸ்ரவேலரை எகிப்தை விட்டு அனுப்பியதற்காக வருந்தினவர்களாக மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் மூன்று நாள் பிரயாணத்தில் தங்கள் கடவுளுக்கு காணிக்கை செலுத்தி வருவோம் என்று கூறினார்களல்லவா? நாம் காலையிலேயே எழுந்து அவர்களைத் திரும்ப அழைத்துக்கொண்டு வருவோம் என்றார்கள்.

மறுநாள் காலையிலேயே பார்வோனது எல்லா பிரபுக்களும் ஏழு இலட்சம் பேர்களாக எகிப்தை விட்டு புறப்பட்டு இஸ்ரவேல் புத்திரரிடம் வந்து சேர்ந்தனர். இஸ்ரவேல் அனைவரும் மோசே மற்றும் ஆரோனுடன் அமர்ந்து, சாப்பிட்டு, பானம்பண்ணி, கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

எகிப்தியர் அவர்களை நோக்கி, நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது மூன்று நாளில் எங்கள் கடவுளுக்கு காணிக்கை செலுத்தி திரும்பி வருவோம் என்றீர்கள். இதோ ஐந்து நாட்களாயிற்றே! எப்பொழுது உங்கள் எஜமான்களிடத்திற்குத் திரும்புவீர்கள்? என்று கேட்டனர்.

மோசேயும், ஆரோனும் அவர்களுக்குப் பிரதியுத்திரமாக நாங்கள் இனி எகிப்திற்குத் திரும்பி வரமாட்டோம் ஏனென்றால் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களை நோக்கி, “நீங்கள் இனி எகிப்திற்கு திரும்புவதில்லை. நான் உங்களை உங்கள் முற்பிதாக்களுக்கு வாக்குப் பண்ணின பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கு அழைத்துச் செல்வேன்” என்று கூறியிருக்கிறார் என்றனர்.

தங்களது சத்தத்திற்கு இஸ்ரவேல் புத்திரர் செவிக்கொடாததைக் கண்ட எகிப்தியர் அவர்களோடு சண்டையிடத் தொடங்கினார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மிகுந்த தைரியத்தையும், பெலத்தையும் கொடுத்தருளினார். அதனால் அவர்கள் எகிப்தியரை அடித்து விரட்டினர். பலர் அவர்களது கையினால் அழிந்தனர்.

மிரண்டுபோன எகிப்தியர்கள் எகிப்திற்கே திரும்பி, பார்வோனிடம் சென்று, இதோ இஸ்ரவேல் மக்கள் தப்பிச் சென்றுவிட்டனர். அவர்கள் இனி எகிப்திற்குத் திரும்புவதில்லை என்று மோசேயும் ஆரோனும் கூறினார்கள் என்று பார்வோனிடம் கூறினர். இதைக் கேட்ட பார்வோனது இருதயம் இஸ்ரவேலருக்கு விரோதமாக திரும்பியது. இஸ்ரவேல் புத்திரரை விடுதலைப் பண்ணினதை நினைத்து வருந்தினர். கர்த்தர் எகிப்தியரைச் செங்கடலில் அழிப்பதற்காக முடிவு செய்தபடியினால், அவர் அவர்களது இருதயங்களைக் கடினப்படுத்தினார்.

பார்வோன் எழுந்து தன் இரதத்தைப் பூட்டி, எகிப்தில் ஒருவர் மீந்திராதபடிக்கு பிள்ளைகளும் பெண்களும் தவிர அனைவரும் எகிப்தை விட்டுப் புறப்பட வேண்டும் என்று கட்டளையிட்டனர். எனவே சுமார் பத்து இலட்சம் பேர் எகிப்தைவிட்டு புறப்பட்டு இஸ்ரவேல் புத்திரரை அழைத்துக்கொண்டு வரப் புறப்பட்டனர். அவர்களை ஏறிட்டுப் பார்த்த இஸ்ரவேல் புத்திரர் மனம் கலங்கினர். தாங்கள் நான்கு பகுதியாகப் பிரிந்து தங்கள் எண்ணப்படி என்ன செய்யலாம் என்று தவித்தனர். அப்பொழுது மோசே அவர்களை நோக்கி, நீங்கள் கலங்காதீர்கள். நீங்கள் சும்மாயிருந்து தேவன் உங்களுக்கு அளிக்கும் இரட்சிப்பைக் காண்பீர்கள். இன்று காண்கின்ற எகிப்தியரை நீங்கள் இனிக் காணமாட்டீர்கள் என்றார்.

மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்தார். இப்படி ஜெபித்தபோதுதான் தேவன் செங்கடலைப் பிளந்து இஸ்ரவேலரை உலர்ந்த தரைவழியாக நடக்கவும், எகிப்தியரை அக்கடலிலேயே அழிக்கவும் செய்தார்.

தொடரும்...

நன்றி: யாசேரின் புத்தகம்.

தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபை அங்கத்தினர்
Mr.Lesley Sambath Kumar அவர்களின் சகோதரர்
Mr.Stanley Chelliah அவர்கள் கடந்த 22-03-2019 அன்றும்

நமது சபையின் நீண்டகால அங்கத்தினரும்
முன்னாள் Church warden ஆக பணியாற்றியவருமான
Mr.A.Selvin அவர்கள் கடந்த 26-03-2019 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# உயிர்ப்புப் பண்டிகை

உயிர்த்தெழுந்தார் இயேசு
புதைகுழிக்குள் மூன்றாம்நாள்
ஜெயித்தெழுந்தார் லேசு
பெயர்த்தெழுந்தார் இயேசு
பாராங்கல் முத்திரைமூடி
படைக்காவலெல்லாம் தூசு

அடித்தஆணி துடித்தமேனி
வடித்தரத்தம் விடுத்தகண்ணீர்
குடித்துநிக்குது சிலுவை
அடித்தஅன்றே பிடித்தஒன்றே
அடைக்கலமாய்க் கிடைத்துவிட்டது
படிக்குப்பிடியாய்ச் சிலுவை

மறக்கவிடாக் காட்சி
மனுக்குலத்துக்கு என்றென்றும்
எடுத்துச்செல்லும் சாட்சி
திறந்தகல்லறை பேசுது
இறந்தகதை எழுந்தகதை
இராப்பகலாய் வீசுது
நெருப்புநெஞ்சச் சூடுபாட்டோடே
நெட்டநெடிதாய்க் கொதித்தெழுந்து
மெழுகுதிரி கரையுது
உருகியுருகி ஒற்றைக்காலில்
தேவனைப்போற்றி இளகியஉடல்
மெழுகுப்பலி தொடருது

ஆடுபலி மாடுபலி
புறாப்பலி அன்றுபோல
இன்றுஇல்லை என்றுஆனது
அடுத்தபலி தொடராவலி
இயேசுவோடு இறுதிப்பலி
நிறுத்திவைக்குங் கருத்தில்நிக்குது.

ஆதாரம் :
நடைமுறைச் சாட்சிகளுடன்
மத்தேயு 28:1 –7
மாற்கு 16:1 –7
லூக்கா 24:1 –7
யோவான் 20:1 –17

கவிதை எண் : 217.
கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

கர்த்தரை அல்லாமல் தேவன் யார்?
நம்முடைய தேவனையன்றி கன்மலையும் யார்?
2 சாமுவேல் 22:32

உன்னதமும்
உண்மையுமான
ஆதி தேவன்
நித்திய தேவன்
எங்கும் நிறைந்த
தேவன்
தேவனாகிய கர்த்தர்
ஒருவரே....
உலகம் எல்லாம்
நிலைகொள்ளும்
உயர்வானவரும்
ஆக்குபவரும்
ஆள்பவரும்..
அவரே...
அறிவின்
ஆனந்தத்தின்
அளவற்ற சக்தியும்
கர்த்தரே...
அகிலம்
அனைத்துக்கும்
உரிமையாளரும்
அவரே..
தேவதூதரும்
தீர்க்கதரிசியும்
சக்தி பெறுவதும்
அவர்கள்
வாய்வார்த்தை
பலிதமாவதும்
அவர்கள்...
இயங்குவதும்
இயக்குவதும்
கர்த்தரே...
பிரபஞ்சமும்
அதன் பிரமிப்பும்
இங்கே....
வினோதமான
விந்தையான
சம்பவங்கள்
நிகழ்வதும்
பரமபிதாவின்
ஆணைக்குட்பட்டே
என்பதும்.... இதன்
பின்னணியில் ... ஒரு
ஆளுநர்
ஆண்டவர் இயேசு...
இருக்கிறார்
என்பதும்
அறியவேண்டும்.
மகனே... கேள்
“ஆத்மா”
இரட்சிக்கப்படுவதும்
கொடுந்துயரிலும்
விடுதலை தருவதும்
கர்த்தர் ஒருவரே...
கன்மலையும்
கருணையின்
ஊற்றும் - நாம்
போற்றும் இறைவரும்
இயேசுவே...
அன்றும் இருப்பவர்
என்றும் இருப்பவர்
பூமியிலும்...
சாதாரண மனிதராக
வந்தவர்...
இன்று... அல்லது
நாளை
இனி இப்புவியில்
வரப்போகிறவரும்
இயேசுவே...
பிரியமானவரே...
பல தெய்வம்
உண்டென்று
கொண்டாடி
மன... மாயையில்
தெளிவின்றி
வாதிடுவோர்
மத்தியில்
தெரு சண்டை
வேண்டாமே...
இயேசு போதித்த
சாதித்த
அன்புவழியில்
அனைவரையும்
நம் வழியில்
வரவழைப்போமே...
அரவணைப்போமே...
ஆதரிப்போமே...
சகோதரரே...
உலகின் ஒரே
தேவன்...
தேவனாகிய
கர்த்தரே...
உலகின் ஒரே
புனித நூல் பைபிள்...
உலகின் ஒரே
மார்க்கமும்
மகத்தானதும்
கிறிஸ்தவமே.
அன்பரே...
மனிதர் மீது
கருணை
உடையவராகவே
கர்த்தர் இருக்கிறார்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 07-04-2019 (முதல் ஞாயிறு)

"என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு,
நான் நம்புகிறது அவராலே வரும்." சங்கீதம் 62:5

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- நமது பிள்ளைகள் கர்த்தருடைய கிருபையால் முழுஆண்டுத் தேர்வு எழுதி வெற்றி பெறவும், பெண்கள் சிறப்பு ஆராதனை, தியான முகாம், VBS யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- பரிசுத்தவார நிகழ்வுகள், வியாகுல வியாழன், சிலுவை தியான ஆராதனை, உயிர்ப்பின் பண்டிகை ஆராதனை, திடப்படுத்தல் ஆயத்தங்கள் யாவும் சிறப்பாக நடைபெறவும், தாயகத்தில் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தலில் மதச்சார்பற்ற நிலையான நல்ல ஆட்சி அமையவும் ஜெபிப்போம்.

"கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வ காலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்." சங்கீதம் 77:11

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# முத்திரை மோதிரம்

முத்திரை மோதிரம் என்பது ராஜாக்கள் மட்டுமே அணியக் கூடிய மோதிரம். ஒரு அரச கட்டளை பிறந்தால், ராஜாவின் கையிலுள்ள மோதிரத்தை வைத்து, ராஜாவின் அதிகாரத்தால் முத்திரைப் பண்ணப்பட்ட கட்டளையை யாராலும் மாற்ற முடியாது. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற இயேசு, அந்த அதிகாரம் முழுவதையும் நமக்குத் தந்து, தம்முடைய சித்தத்தை நம்மூலமாக நிறைவேற்ற முத்திரை மோதிரமாக நம்மைத் தெரிந்தெடுத்திருக்கிறார். ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, "செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, ... உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்: நான் உன்னைத் தெரிந்து கொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்"(ஆகாய் 2:23). உலகத்தின் பார்வையில் மனிதர்கள் நம்மை அற்பமாய் எண்ணலாம். நாமோ பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டவர்கள். நாம் அதிகாரமும், வல்லமையுள்ளவர்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிறைந்திருக்கும்போது, பெரிய மலைபோன்ற பிரச்சனைகள் நமக்கு விரோதமாக வந்தாலும் அது சமபூமியாய் மாறும். நமக்குள் இருக்கிற வல்லமையுள்ள இயேசுவின் நாமத்தில் நாம் நிற்கும்போது, கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்" (சகரியா 4:6,7). கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்காக செருபாபேலை முத்திரை மோதிரமாகத் தெரிந்து கொண்டார். "இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ? ... ஆலயத்தைக் கட்டுங்கள் அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்"(ஆகாய் 1:4-8). கர்த்தர் நமக்குத் தந்த அதிகாரத்தை எவ்வாறு உபயோகப்படுத்துகிறோம்? தேவனுடைய ராஜ்யத்தின் கட்டுமான பணிக்காக, விரிவாக்கத்திற்காக கிறிஸ்துவின் ராஜ்யத்தின் சுவிசேஷம் அறிவிக்கப்பட, உண்மையாய் கர்த்தருக்காக வைராக்கியமாக செயல்பட நம்மைத் தெரிந்தெடுத்திருக்கிறார். நம்மைக் கொண்டு செய்யும்படி வைத்துள்ள திட்டத்தை ஆவியானவரின் துணையோடு நிறைவேற்ற வேண்டும்.

அடிமையாக, குற்றவாளியாக, தண்டனைக் கைதியாக, சகோதரர்களால் புறக்கணிக்கப்பட்ட மனிதனாக இருந்த யோசேப்பின் கையிலே பார்வோன் ராஜாவின் கையிலிருந்த முத்திரை மோதிரம் போடப்பட்டது. "பார்வோன் தன் கையில் போடப்பட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி,

அதை யோசேப்பின் கையிலே போட்டு, … தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்"(ஆதி 41:42). யோசேப்பை எகிப்தியர் அனைவரும் தெண்டனிட்டுப் பணியச் செய்தார். நாம் அவர் கையில் முத்திரை மோதிரமாய் இருக்கும்போது, சத்துருக்கள் முன்னிலையில் நம்மை உயர்த்தி, கனப்படுத்துவார். ராஜாவின் கையிலிருந்த முத்திரை மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட யோசேப்பு தேசத்தின் பஞ்சத்தை மாற்ற உபயோகபடுத்தினான். கர்த்தர் நமக்குத் தந்திருக்கிற அதிகாரத்தை, வசதி வாய்ப்பை மற்றவர்களின் தரித்திரத்தை, வேதனையை மாற்றி எல்லாருக்கும் ஆசீர்வாதமாக இருக்க உபயோகிக்க வேண்டும். வாழ்க்கையில் வசதிகள் கூடும்போது, வரங்கள் செயல்படும்போது பெருமை தலைதூக்காதவாறு தாழ்மையாக இருக்க வேண்டும். முத்திரை மோதிரமாக இருந்து மகிமையாக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப் மற்றும் தீரு ராஜாவையும் பெருமையும் மேட்டிமையும் வந்தபோது தரையிலே தள்ளிப்போட்டார். "யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன் கோனியா, என் வலது கையின் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றி எறிந்துபோடுவேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 22:24). கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து, தேவன் எதிர்பார்க்கிற, மகிமையான வாழ்க்கை வாழ நம்மைத் தாழ்த்துவோம்.

